# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம்

---

**[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம்**

[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 24/2026

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையானது, அதன் (5) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

"(5) உயர்நீதிமன்றத்தினது நீதிபதிகள் ஓய்வு பெறுவதற்கான வயது அறுபத்தேழாகவும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தினது நீதிபதிகள் ஓய்வு பெறுவதற்கான வயது அறுபத்தைந்தாகவும் இருத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், பிரதம நீதியரசரினது ஓய்வுபெறுவதற்கான தேதி, ஒன்றில் பிரதம நீதியரசர் அறுபத்தேழு வயதினை அடைகின்ற அத்தேதியில் அல்லது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு ஆண்டு காலப்பகுதியொன்று பூர்த்திசெய்யப்படுகின்ற அத்தேதியில், இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அத்தேதியாதல் வேண்டும்:

ஆயின் மேலும், முதலாவது காப்புவாசகத்தில் தரப்பட்ட ஆறாண்டுகள் கால மட்டுப்பாடு இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியில் உள்ளவாறாக பிரதம நீதியரசர் பதவி வகிக்கின்ற எவரேனுமாளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.".

அரசியலமைப் பின் 137 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**3.** அரசியலமைப்பின் 137 ஆம் உறுப்புரையில் "பத்தொன்பது பேர்களுக்கு அதிகமாகாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்திநான்கு பேர்களுக்கு அதிகமாகாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

PL 15908 - 538 (2026/08)

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம் இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்